சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VII. } MADRAS, AUGUST 1911. { NO. 1,
தொகுதி எ. } சென்னை, ஆகஸ்டு மீ 1911. { பகுதி க,

:[*]:

ஆனரபில் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே.

ஆனரபில் மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோகலேயைப் பற்றி நமது பத்திரிகையில் பேசநேர்ந்தமைக்குச்சந்தோஷிக்கின்றோம். இவர் "தக்கோனெனத்திரி" என்ற ஔவைப்பிராட்டியாரின் உபதேசப்படி நமது தேசமுழுதும் யோக்கியர் என்று புகழும்படி நடப்பவர். தேசமுழுதும் புகழும் ஒரு யோக்கியரைப்பற்றிப் பேசுவதில் யாருக்குத் தான் சந்தோஷ மிராது. அவரைப்பற்றிப் படிக்க யாருக்குத் தான் விருப்பமிராது. ஆகவே இங்கு எழுதுவது பொருந்து மெனத் துணிந்தோம்.

இவர் தன்னலங்கருதாத தருமகுணசீலர். இவரிடத்தில் இப்போது இந்துக்களுக்கேயன்றி ஆங்கிலேயருக்கும் நல்ல மதிப்புண்டு. இவர் சிறுவயது முதற்கொண்டு யுக்தியும் புத்தியு முடையவராய் அவைகளைக் கல்வியால் விருத்திக்குக் கொண்டுவந்தனர். அந்த யுக்தியையும் புத்தியையும் சுவதேசநன்மையின் பொருட்டுபயோகிக்க முற்பட்டு உலகப்பற்றற்ற ஓர் துறவிபோலிருக்கின்றனர். இவரிடத்தில் படாடோபமென்பது சிறிதுங் கிடையாது.

இவருடன் படித்தவர்களெல்லாரும் பெருத்த இராஜாங்க உத்தி யோகத்திலும் வக்கீல் தொழிலிலும் பிரவேசித்து நல்ல பேரெடுத் திருக்கின்றனர். அப்படிச் செய்வது சுயநலங் கருதியே யாத லால், இவர் தமது கல்வித்திறமையையும் புத்தியையும் அப்படிச் செலவிடாது பர்கூசன்காலேஜில் சொற்பசம்பளமுள்ள உபாத் தியைத் தொழிலில் அமர்ந்து கல்விபோதிக்கத் தலைப்பட்டனர். இது உலகத்திற்குப் பேருபகாரமும் பாபமற்றதுமான தொழி லென்பது யாவரும் ஒப்பத்தக்கதாம். இந்த உபாத்தியைத் தொழிலில் இவர் இருபத்தைந்து வருஷகாலமிருந்தார். பிள்ளை கள் இவரிடத்து மிக்க அன்புடையவரா யிருப்பர். இவர் போதிப் பதிலும் மிக்க சிரமமெடுத்து வந்தனர். இப்பொழுது இவருக்கு இராஜசபையில் மெம்பர் ஸ்தானங் கிடைத்திருக்கிறது.

இந்தமகான் சென்றஜுலைமாதம் 22-ந்தேதிஇச்சென்னைக்கு விஜயமாகி அன்று மாலை விக்டோரியா பப்ளிக்ஹாலில் சர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் "சென்னை எலிமெண்டரி எடுகேஷன் லீக்கின்" ஸ்தாபனத்தைப் பற்றியும் கீழ்த்தரக் கல்வியைப்பற்றியும் ஓர் அரிய உபன்யாசம் புரிந்தனர். இந்த உபன்யாசம் புரிந்ததின் நோக்கம் யாதெனில் கீழ்த்தரக் கல்வியைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்பதேயாம். இதற்கு அநேகர் ஆட்சேபித்தனர். ஆயினும் கல்வியைக்கட்டாயப்படுத் தல் பிற்காலத்தில் நல்லபயனை யளிக்குமென்பதை யறிந்தார்பலர் ஒப்புக்கொண்டு அதற்குத் தக்க உதவிசெய்ய முந்தினர். இங்கி லாந்து, அயர்லாந்து, ஜப்பான் முதலிய தேசங்களிலும் கல்விகட் டாயப்படுத்தப்பட்ட காலத்தில் அநேக ஆக்ஷேபங்கள் நேர்ந்த தெனினும் பின் அந்தக் கொள்கை ஸ்தாபிக்கப்பட்டது.

அதனால் அத் தேசங்கள் எவ்வளவோ நல்ல நிலைமையை யடைந்து வருகின்றன. கல்வியறிவுடையவனே கண்ணு டையவனாவான். உலகத்தில் கண்ணுள்ளவனுக்கும் கண்ணில்லாத வனுக்கும் எவ்வளவு தாரதம்மிய மேற்படுகிறதோ அதுபோலவே

கல்வியறிவைப் பெறாத தேசத்திற்கும் கல்வியறிவைப் பெற்ற தேசத்திற்கும் வித்தியாசமேற்படு மென்பதி லையமில்லை. ஆகவே ஆனரபில் மிஸ்டர்கோகலே இகபரமிரண்டிலும் நன்மையையளிக்கும் கல்வியைப்பற்றி இவ்வளவுழைப்பு எடுத்துக்கொண்டது அவருக்கு எக்காலமும் கீர்த்தி யளிக்கக்கூடியதாம்.

இது வன்றி, இவர், தமக்கு உபசாரமாக, ஓர் அட்ரஸ் வாசித்த சொன்னை பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மத்தியில் அரிய உபன்னியாசம் ஒன்று புரிந்தனர். அதுதான் நாம் மிகவும் பாராட்டத் தக்கது. அதன் ஸாராம்ஸமட்டும் இங்கு எழுதுவாம்.

(1) பிள்ளைகள் தங்களுக்குச் செய்து கொள்ள வேண்டிய கடமை.

(2) தாங்கள் மற்றப்பிள்ளைகளின் பொருட்டுச் செய்ய வேண்டிய கடமை.

(3) பெரியோர்கள், போதகர்கள், கவர்ன்மெண்டார் இவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதம்.

(4) தங்கள் தேசத்திற்குச் செய்ய வேண்டிய கடமை—என இவ்விதம் பிரித்து, புத்தியையும் யோக்கியதையையும் சம்பாதித்துக்கொள்வதே தாங்கள் தேடிக்கொள்ள வேண்டிய தாகுமெனவும் ஒத்துழைத்தலும் அடக்கமும் பாராட்டுவதே மற்றப் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையென்றும் விவரித்தார்.

பெரியோர்கள் போதகர்கள் கவர்ன்மெண்டார் இவர்களிடத்துப் பாராட்டவேண்டியது அடக்கமெனக்கூறி அதையே விவரித்துப்பேசினர். தேசம் முன்னுக்குவரவேண்டியதைப்பற்றி உழைக்கக் காலம் நேரிடுமென்றும் அதற்குரிய ஸாதனங்களை இப்பொழுதே தேடிக்கொள்ளல் வேண்மென்றும் பேசிமுடித்தனர்.

மிஸ்டர் கோகலே கூறிய நன்கு விஷயங்களும் நமது மாணுக்கர்களுக்குச் சிறந்த போதனையாகும். கல்வியைப்

பற்றி இவர் இவ்வளவுழைப்பு எடுத்துக்கொண்டது நம்தேசத்தின் அபிவிர்த்திக்கோர் அறிகுறியென்றே கூறுவோம். இவருடன் இன்னும் அநேக கனவான்கள் சேர்ந்துழைக்கின் இம்முயற்சி மிகச்சிறப்புறும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இவர் சென்னையில் மூன்றுநாளிருந்தார். மூன்றுநாளும் மூன்று முக்கியமான உபன்யாசங்கள் புரிந்தனர். கடைசியாக இவர் செய்தது பொதுவாழ்க்கையைப் பற்றியேயாம். இன்னும் சிலநாள் இச்சென்னையில் தங்கியுபன்யசிக்க வேண்டுமென்ற நோக்கத்துட வந்தனர். ஆனால் அவர் மகளுக்கு ஜுரமென்று தந்தியொன்று வந்தமையால் மூன்றும் நாள் பூனாவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டனர்.

இந்திய நாட்டு ஜனங்களுக்கோர்.

எச்சரிக்கை.

நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜாதிப் பெண்பிள்ளையும் கற்புடைய குடும்பத்தில் பிறந்தவர். மானத்தில் மதிப்புள்ளவர். வீட்டிலிருந்துகொண்டே மரியாதையாய் அநேக தொழில்கள் செய்து வந்தார்கள். அதில் ஒருதொழிலைப்பற்றி மாத்திரம் பேசுவோம். அதாவது நூல்நூற்றல். மேற்படிப்பெண்கள் தங்கள் விவசாயத்திற்கிடைத்த அல்லது விலைக்குவாங்கிய பருத்தியைத் தங்கள் கைகளால் பிரித்துக் திருமணை என்னும் கருவியால் அரைத்துக் கொட்டை எடுத்து நரம்புகட்டிய வில்லினால் உடைத்து, இராட்டை என்னும் யந்திரத்தால்நூற்று இரும்புக்கதிரில் சுற்றித் தாராக்கிப் பின்பு வீசணம் என்னும் (8) இவ்வடிவுள்ள யந்திரத்தால் சுற்றி கனிசெய்து செங்குந்தரிடம் கொடுத்து

சேலை, வேஷ்டி, துப்பட்டி, புடவை, ஜமுக்காள முதலிய பல தினுசு வஸ்திரங்களைச் செய்வித்துக் கொள்வார்கள். மேற்படி வஸ்திரங்களையே தேவாலயங்களுக்கும், கலியாண முதலிய சடங்குகளுக்கும் உபயோகப்படுத்தி வந்தார்கள். இப்படிப்பட்ட தொழில் தங்கள் கையிலிருந்து வந்ததினால் தம் மக்கள் முதலியயவர்களிடத்தில் விரோதம் வந்த காலத்திலுங்கூட என் கைகால்களிருக்கின்றன; என்ராட்டை இருக்கிறது; என்றுசொல்லிக்கொண்டு கிழவிகளும் ஏக்கமின்றி இருந்தார்கள். திடமுள்ள பெண்கள் கூட ஓழிந்த சமயத்தில் இந்நூல் நூற்றுவந்தார்கள். இது இவர்களுக்கு ஜீவனமாயிருந்து வந்தது.

நிற்க, இக்காலத்தில் இத்தேசத்தில் மில் கம்பெனிகள் எங்கேயோ இரண்டொன்று ஏற்பட அதைக்கண்டு நமது பெண் மணிகள் அத்தொழிலை நிறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த மில் கம்பெனிபோல் நூறல்ல, ஆயிரமாயிருந்தாலும் நம் நாட்டுக்குப்போதாது. இதனால் வேறு நாட்டு நூல்கள் நம் நாட்டுக்கு வரத் தொடங்கினது. நமது பெண்மணிகள் ஒவ்வொரு குடும்பத்திலும் வருஷவாரியாக நூற்கும் நூல் பத்து குடும்பத்திற்கு வஸ்திரத்திற்குப் போதுமானதாயிருந்தது. இத்தொழிலை நாம் அசட்டை செய்தால் நாம் பிழைக்க வகையற்றுப்போவோம். ஆகையால் புத்திமான்கள் நம் நாட்டுப்பெண்கள் நூற்கும் துணிகளையே உபயோகப்படுத்தி வந்தால், முன் காலத்தில் 20-ம் நெம்பர் முதல் 60-ம் நெம்பர் வரைநூற்று வந்ததை விட இன்னும் நயமாக நூற்கத் தொடங்குவார்கள்.

கம்பெனி வேலைக்குப் போவதிலும் அக்கம்பெனி நூலைக் கொண்டு நெய்த துணி கட்டிக்கொள்வதிலும் அநேக தீங்குகள் உண்டு. அந்தக் கம்பெனியில் பிராமணர் முதல் சக்கிலியர் வரை எல்லாரும் வேலை செய்கிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து வேலைசெய்வதினால் தொத்து வியாதிகள் பல உண்டாகின்றன. தவிர பெண்கள் அவ்விடம்போவதினால்புருஷர்கள் பக்

கத்தில் நின்று சரீரம் சம்பந்தப்படும்படி நேரிடுகின்றது. இதில் பெண்கள்தேகம் மிருதுவாயும் மனஇளக்கமுள்ளதாயும் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார். புருஷனுடைய சரீரம் அவர்கள் பேரில் பட்டவுடனே பெண்களுடைய மனம் இளகிக் கற்புக்கு விரோத முண்டாகிறதென்று நூல்கள் முறையிடுகின்றன. 1-வது சத்தியக் கெடுதி 2, தொத்துவியாதி 3. மரியாதைக்குறைவு 4, கற்பு விரோதம் 5. தொழில் குறைவு 6. வரும்படிக் குறைவு 7, சோம்பல் இவைகளெல்லாம்கம்பெனிகளால் ஏற்படுகின்றன. மேலும் கம்பெனி நூல்வேஷ்டி நம் கைநூல்வேஷ்டிபோல் உடைதாங் காது. ஒருவருஷம் வரக்கூடியது 6-மாதங்கூட நிற்காது. அதற் குக் காரணம் கம்பெனி நூல் அக்கினியின் ஆவியால் வெந்து நொந்து போகிறபடியால் நமது நாட்டு வேஷ்டிகள் போல் 10 வெள்ளைகள் தாங்காமல் 4 வெள்ளைக்குள் கிழிந்து கந்தையாய்ப் போகின்றது.

ஆகையால் நமது ஜனங்கள் மாதரை வெளிவிடாமல் தங் கள் வீட்டிலேயே நூல் செய்வித்து அந்த நூலாலாகும் துணி களையே பெரும்பாலும் உபயோகப் படுத்துகிற தென்று விரதம் வைத்துக்கொண்டால் தெய்வானுக்கிரகம், பொருள் வரவு கற்புடைமை, சத்தியம், சோம்பலில்லாமை முதலிய நற்குணங் களைப்பெற்று முன்னுக்கு வரலாம். இத்தொழிலைக் கைவிட்டால் அசத்தியம், கெட்டகுணம், சோம்பல் விவகாரம், தெய்வகோபம் இவைகளுக்குப் பாத்தியப்படவேண்டி யிருக்கும். மேலும் நமது பெண்மணிகள் பகலிலும் நிலவிலும் ஓரிடத்தில் கூட்டங்கூடி நூல் நூற்கும் காலத்தில் லோகோபகாரியாகிய ஸ்ரீ புகழேந் திப்புலவர் பாடிய பாரத அம்மானை அல்லி அரசாணிமாலை பவ ளக்கொடிமாலை முதலியவைகளைக் கேட்டுச் சந்தோஷமாய் நூற்றுவருகிற வழக்கத்தை மறுபடியும் கொண்டுவரவேண்டும். நமது ஜனங்கள் எத்தொழிலைச் செய்தாலும், கடவுள் விஷய மான பாடல்களைப் பாடிக்கொண்டு தொழிலைச் சந்தோஷமாகச் செய்வார்கள். அப்படிப்பட்ட நூலினலாகிற உடை மிகவும்

மேன்மையானதென்று நினைக்கவேண்டும். நமது கன்னிகைகள் நூற்கும் நூலைத் திருமங்கிலியத்திற்கும் உபயோகப் படுத்திக் கொள்வதே உசிதம். மிலேச்சர்கள் நூற்கும் நூலை ஒருவிஷயத்திலும் உபயோகப்படுத்தக் கூடாது. நம்முடைய மானத்தை நமது கையைக்கொண்டே மறைத்துக்கொள்வது உசிதம். ஆகையால் மகா மானவான்களாகிய நாம் நம் நாட்டு வஸ்திரங்களையே வாங்கி நமது மானததை ரக்ஷிப்போமாக. இதுவே சத்தியம். இதுவே ஞானம், இதுவே இகபரசாதனம்.

சற்புத்திகூறுவோன்.

வீணெண்ணங்களை ஒழி.

அல்நாஸ்கர்என்போன் முழுச்சோம்பேறி; தகப்பனுயிருடன் இருக்குங்கால், அவன் ஒரு வேலையையும் செய்தறியான். தகப்பனிறந்த பிறகு அவன் 100-ரூபாய்க்கு அதிபதியானன். அல் நாஸ்கர் அப்பணத்தைக் கொண்டு கண்ணுடிச்சாமான்களை வாங்கினன். ஓரிடத்தில் விலைக்குவாங்கி அங்கே யிருந்து வியாபாரஞ் செய்யலானன் ஒருநாள் சாமான்களைக் காலண்டையில் வைத்துக் கொண்டு பின் வருமாறு தானே பேசலானன்:—

"இச்சாமான்களுக்கு நான் நூறு ரூபாய் கிரயம் கொடுத்தேன். இவ்வளவுதான் என் ஆஸ்தி இவைகளைச் சில்லரையாக விற்று இருநூறு ரூபாய் சம்பாதிப்பேன். இருநூறு ரூபாய் கூடிய சீக்கிரத்தில் நானூறு ரூபாயாய்விடும். நாளாக ஆக நான் நாலாயிரம்ரூபாய்க்கு அதிபதியாவேன். நாலாயிரம்ரூபாய் இரண்டத்தனை ஆகாமலிருக்காது. இப்படியாக நான் 10,000-ரூபாய் சம்பாதித்துவிட்டால் கண்ணுடி வியாபாரத்தை விட்டு நகை வியா

பாரியாய் விடுவேன். பிறகு ரத்தனம்,முத்து,வைரம் முதலியவைகளை வியாபாரஞ் செய்வேன்.

அதிக தன வந்தனுக இருக்குங்கால் நான் ஒரு பெரிய வீட்டை வாங்கி அதை மேஜைகளினுலும், நாற்காலி களினுலும் சோபாக்களினுலும், வேலைக்காரர்களினுலும் வண்டிகளினுலும் நிறப்புவேன். அத்துடன் நிற்காமல் என் திரவியத்தை 100,000-ரூபாய்க்குக் கொண்டுவர முயல்வேன். அப்பொழுது இத்தேசத்து மந்திரி புத்திரியை விவாகம் செய்துகொள்ள இச்சிச்து மந்திரியைக் கேட்பேன். இராஜகன்னிகையின் குணத்தையும், அழகையும், சொற்சாதுரியத்தையும் அவனிடம் விவரிப்பேன். கல்யாண தினத்தில் 1000-ரூபாய் அளிப்பதாய் வாக்குத்தத்தஞ் செய்வேன்.

கல்யாண மானபின் வெகு ஆடம்பரத்துடன் என் மாமனுரைப்போய்ப் பார்ப்பேன். அவன் தன் வலதுபக்கத்தில் எனக்கு ஆசனமளிப்பானென்பதற்கு ஐயமில்லை. அப்பொழுது நான்வாக்குத் தத்தஞ்செய்த ரூபாய் ஆயிரத்தையும் பின்னும் 1000-ரூபாயுமளிப்பேன். அளிக்குங்கால் "ஐயா! நான் வார்த்தையைப் பொய்யாக்கேனென்பதை இப்போது நீ நன்கறிவாய்; சொன்னதை விட அதிகமாய்ச் செய்வேன்" என்பேன்.

பாரியை வீட்டிற்கு வந்தவுடன் அவளைக் கீழ்ப்படியும்படி செய்ய முயல்வேன். ஆகவே நான் அவளுடன் அதிகமாய்ப் பேசாமல் பராமுகமா யிருப்பேன். அப்பொழுது அவள் என்னிடம் வந்து என்காலில் விழுந்து தன்னை அங்கீகரிக்கும்படியாய் வேண்டுவாள். ஆனுல் அவளை என் காலாலுதைத்துத் தள்ளுவேன்.–" என்று இவ்விதம் அல்நாஸ்கர் தன்னை முழுதும் மறந்து மேற்சொன்னபடி யோசித்துக் கண்ணுடியிருப்பதைக் கவனியாது காலாலுதைக்கவே சாமான்கள் சுக்கல் சுக்கலாய் வெகுதூரஞ் சிதறி 100,000 துண்டுகளாகப் போய்விட்டன. ஒவ்வொரு துண்டையும் 1-ரூபாயாக விற்றுல் அல்நாஸ்கர்

ரின் எண்ணப்பிரகாரம் 100,000-ரூபாய்க்கு அதிபதி என்பதற் கையமில்லை.

வீணான மனோராஜ்யம் துன்பத்தை விளைவிக்குமேயன்றி நன்மையை ஒருக்காலும் அளிக்காது.

இஞ்சி வற்றல் முற்பா செய்தல்.

(பிழைக்கும் வழி.)

மங்களூரிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ ஜே. ஐ. சல்தானு அவர்கள். விவஸாய டைரெக்டர் அவர்களுக்கு இஞ்சி வற்றலைப்பற்றி (முற்பா) எழுதிய குறிப்பு:—மங்களூரில் 'தோஷி' என்று பெயர் வழங்கும்இஞ்சிவற்றல்அல்லதுமுற்பாபோட உத்தேசிப்பவர்கள் இஞ்சிப் பயிரை செப்டம்பர்மீ முதல் வாரத்தில் (அதாவது பயிர்நட்ட நாலாம் மாதத்தில்) வெட்டியெடுத்து அதில் இளசாயிருக்கும் அந்த வருஷம் பிடித்த இஞ்சிக்கிழங்கை மாத்திரம் வறறல்போட உபயோகப்படுத்தி, விதையாய் நட்ட மீந்த முற்றின பாகத்தைக் கடைகளில் 'அஜ்ஜி' என்று பெயர்கொண்ட இஞ்சிபாய் ஸாதாரண உபயோகங்களுக்காக விற்கிறார்கள்.

மங்களூரில் இஞ்சி வற்றல் பின்வருமாறு செய்கிறார்கள்:—

இளசாய் வெட்டியெடுத்த இஞ்சியைத் துண்டுசளாக்கி சீவி அந்த இஞ்சியின் மேல்த்தோலை அப்புறப்படுத்தி அப்பால் அதைத் தலைமயிர் குத்திவைக்கும் கவர்கொண்ட ஊசிகளை ஒரு பிடியில் சொருகிவைத்த ஆயுதம் போலொத்த ஒரு கருவியால் நெருங்கக் குத்துகிறார்கள். இப்படிச் செய்துகொண்டிருக்கும் போது இஞ்சியைக் குளிர்ந்த தண்ணீர்வார்த்து வைத்திருக்கும் ஒரு அகன்ற கிண்ணம்போலொத்த பாத்திரத்தில் 4நாளைக்குப் போட்டு, நாளொன்றுக்கு மூன்றுதரம் அந்தப் பாத்திரத்தி

லிருக்கும் தண்ணீரைக் கொட்டிவிட்டு, ஒவ்வொருதரமும் புதுத் தண்ணீர் கொட்டுகிறார்கள். கிண்ணியிலிருக்கும் தண்ணீரை வெளியேகொட்டும்போதெல்லாம் இஞ்சியைக் கையால் நன்றாய் அமுக்கிப் பிழிந்துவிடுகிறார்கள். ஐந்தாவதுநாள் நல்ல தண்ணீரில் நாள் ஒன்றுக்கு மூன்று தடவை வேகவைக்கிறார்கள். ஒவ்வொருதரமும் சுமார் 3 மணி நேரத்திற்கு நல்லதண்ணீரில் வேகவைக்கிறார்கள். மூன்றாவதுதரம் வேகவைத்த பிற்பாடு, அந்தஇஞ்சியை ஒரு துணியில் கட்டி அதன்மேல் ஒரு கனமான வஸ்துவை வைத்து அதிலிருக்கும்தண்ணீரை அப்புறப்படுத்துகிறார்கள். இச்சமயத்தில் முன் கூட்டிய சர்க்கரையைத் தண்ணீரில் கலக்கி கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை அதில் ஊற்றிக்காய்ச்சி அழுக் கெடுத்து அதை லேசான பாகு பதத்தில் பதம்பார்த்து எடுத்துவைத்திருக்கவேண்டும். இப்படித் தயாரா யிருக்கும் சர்க்கரைப்பாகில் மேற்சொன்னபடி தயார்செய்த இஞ்சியை ஊறப் போட்டுவிடுகிறார்கள். அப்பால் இந்தச் சக்கரை பாகில் போட்ட இஞ்சியை சுமார் அரைநாளைக்காவது அல்லது இன்னும் சற்று ஜாஸ்தி நேரத்திற்காவது, பாகு கெட்டியாகிற பதம்வரை காய்ச்சி அதைப் புட்டிகளில் அடைக்குமுன் ஒரு நாளைக்கு ஆற வைக்கிறார்கள்.

இப்படி இஞ்சிவற்றல் மங்களூரில் ஸம்பத்துபெற்ற அநேக கிறிஸ்தவர்கள் வீட்டில் சொந்த உபயோகத்திற்காகவும், ஸெயிண்ட் அந்தோணி பள்ளிக்கூடத்தில் விற்பனையை உத்தேசித்தும் தயார் செய்கிறார்கள். 25 இராத்தல் நிறையுள்ள ஒரு மணங்கு வற்றலுக்கு. ரூபாய் 10 முதல் 12 வரை விலைகிடைக்கிறது. இப்படி வற்றல் செய்ய லாயக்கான இளம் இஞ்சிக்கு, முற்றின இஞ்சியை விட நல்ல கிராக்கியிருக்கிறது. 1909-ம் வருஷ செப்டம்பர்மீ முற்றின இஞ்சியின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 2 முதல் $2\frac{1}{2}$ வரை இருந்தபோது இளம் இஞ்சி 3 முதல் 4 ரூபாய் வரை விற்றது.

மேல் நாட்டாரால் விலைக்கு வாங்கப்படும் இஞ்சியைத் தயார் செய்யும் விதம் இந்த ஜில்லாக்காரர்களுக்குத்தெரியாது.

குழந்தைகளுக்குக் கைத்தீனி கொடுப்பது.

தாய்ப் பால் கொடுத்து வளர்க்கவாவது, அல்லது தாதி ஏற்படுத்திப் பால் கொடுக்கவாவது அஸந்தர்ப்பமா யிருக்குங் காலங்களில்குழந்தைக்குக் கைத்தீனி கொடுத்து வளர்க்கும் விதத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம். குழந்தைகளுக்குக்கைத்தீனிகொடுத்து வளர்ப்பதைப்போல் அதிக சிரத்தை யெடுக்க வேண்டிய தொழில் யாதொன்றுமில்லே. ஏனெனில் முழுவதும் கைத்தீனி கொடுத்து வளர்க்கும குழைந்தைகளில் நூற்றில் 26-தான் பிழைக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால், தாயானவள் அதிக முயற்சி யெடுத்துத் தன்குழந்தைக்கு எப்படிப்பட்ட ஆகாரம் தகுந்தது என்று அனுபோகத்தில் கண்டுபிடித்து அதிக ஜாக்கிரதையுடன் அதை வளர்த்துக்கொண்டு வருகிற தாயிருந்தால் மட்டுமே அக்குழந்தை சுகதேகியா யிருக்கு மென்பதற்கு யாதொரு ஸந்தேகமு மில்லே.

குழந்தைக்கும் பாலேயே ஆகாரமாக இயற்கையிலேயே அமைக்கப்பட்டிருப்பதால், அதற்குப்பதிலாகஉபயோகப்படுத்துகிற ஆகாரமும் பாலாகவே யிருக்க வேண்டும். தாய்ப் பாலுக்கு பதிலாகக் கழுதைப் பால், வெள்ளாட்டுப் பால் பசுவின் பால் ஆகிய மூன்று பால்களில் ஏதாவதொன்றை உபயோகிக்கலாம். இவைகளில் கழுதைப் பாலே கொஞ்சம் குறைய தாய்ப் பாலுக்கு நிகரானது. ஆனல் அது கிடைப்பது அருமையாயிருப்பதால். அதை ஸாதாரணமாய் உபயோகிக்கிறதில்லே. அதற்கடுத்தது வெள்ளாட்டுப் பால். இதில் ஓர்வித தூர்வாஸனை யிருப்பதால், சில குழைந்தைகளுக்கு வாந்தியுண்டாவதுண்டு. அதுவு மல்லாமல் வெள்ளாடு மடியில் மயிருள்ள ஜெந்துவானதால், பால் கறக்

கும்போது, பாலுக்குள் அம்மயிரும் உதிரும். ஆகையால், வடிகட்டி அதிக ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். ஒரே ஆட்டுப் பாலா யிருந்தால்தான் மிக்கநலம். கழுதைப்பாலானாலும் ஆட்டுப் பாலானாலும் எதையும் தண்ணீர் கலந்தே உபயோகிக்க வேண்டும்.

பசுவின் பாலும் அதிக ஸத்துள்ளதாகையால், அதையும் தண்ணீரில் கலந்தே உபயோகிக்கவேண்டும். தாய்ப் பாலுக்கும் மற்றப் பால்களுக்கும் உள்ள ஓர் பெரிய வித்தியாஸம் யாதெனில் தாய்ப் பாலைக் குழந்தைகள் தாமாகவே உறிஞ்சிக் குடிக்கின்றன. ஆனால் மற்றப் பால்களைக் கறந்து அதன் பின் தான் அதை உபயோகப்படுத்துகிறோம். பால் கறக்கும்பொழுது அந்தப் பாத்திரத்திலும் கறப்பவன் கையிலுமுள்ள கிருமிகளும் ஆகாயத்திலுள்ள கிருமிகளும் அப்பாலுடன் கலக்கின்றன. எப்படிப்பாலானது குழந்தைகளின் வளர்ச்சிக்குக்காரணமாயிருந்ததோ, அதே விதமாக கிருமிகளும் பாலில் வெகு சீக்கிரத்தில் பலுகிப் பெருகி விடுகின்றன. ஆகையால், எந்தப் பாலானாலும் நன்றாய்க் கொதிக்கக் காய்ச்சி வடிகட்டிக் கொடுப்பதனால், அதிலுள்ளகிருமிகள் நாசமடைகின்றன. தாய்ப்பாலைவிட மற்றப் பால்களில் சர்க்கரையின் அளவு சிறிது குறைவாயிருப்பதால், சிறிது சர்க்கரையும் கலந்து கொடுக்கவேண்டும். பசுவின்பால் ஸாதாரணமாகவே புளிப்புள்ள தாகையால், அத்துடன் சிறிது சுண்ணும்பு ஜலம் கலந்து கொள்வது உத்தமம். சில குழந்தைகள் பால்குடித்துச் சிறிது நேரத்தில் பால உறைந்து வாந்தி பண்ணுகிறார்கள். அதைத் தாய்மார் கண்டு வயிற்றில் புளிப்பேறி விட்டது என்று பயப்பட்டு பல மருந்துகளையும் கொடுக்கிறார்கள். ஆனால் வாந்தியலல, மலத்தில் பால் திரைந்து காணப்பட்டால், அதுவே அஜீரணத்தைக் காட்டுங் குறி.

அந்தந்த நேரத்திற்கு வேண்டியதை அப்போதைக் கப்போது தயார் செய்யவேண்டுமேயன்றி, இரண்டு மூன்று தடவை

களுக்கு மொத்தமாகச் செய்துவைக்கக்கூடாது. ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொடுத்தால் குழந்தையின் சுசத்திற்கு அனுகூலமாயிருக்கும். சில குழந்தைகளை எவ்வளவு கவலையாகப் பார்த்தாலும் அவர்களுக்கும் சுகவீனமுண்டாகிக் கஷ்டப்படுவதுண்டு. அப்பொழுது உடனே வைத்தியருக்குத் தெரிவித்து வேறே ஆகாரமும் மாற்றிக்கொடுக்க வேண்டும்.

தாய், பால் கொடுக்கும்போது குழந்தையைத் தூக்கி நெஞ்சோடணைத்துக்கொண்டு எப்படிக் கொடுப்பாளோ, அதே விதமாகக் குழந்தைக்குப் புட்டிபால் கொடுக்கும்போதும். அதைத் தூக்கி நெஞ்சோடணைத்துத் தலையை மாத்திரம் கொஞ்சம் நிமிர்த்தி வைத்துக்கொண்டு பால் கொடுக்கவேண்டும். சில தாய்மார் குழைந்துகளுக்கு அவர்கள் படுக்கையிலே புட்டிகளை வைத்துத் தானகவே பால் குடிக்க விடுகிறார்கள். இப்படிச் செய்வதில் குழந்தை பாலைக் குடித்த பின்னும் உறிஞ்சிக்கொண்டேயிருப்பதால் வயிற்றுவுள்ள காற்றுபுகுந்து அஜீரணம் வாந்தி வயறேட்டம், வயிற்றுப்பிசம் முதலிய வியாதி கண்டு உபத்திரவப்பட இடமாகும். ஆகையால், குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தான் பால் கொடுப்பது நல்லது. பால் குடித்துமுடித்த உடனே கொஞ்ச நேரம் தலையை நிமிர்த்தி வைத்திருந்து மெதுவாகத் தொட்டிலில் படுக்கவைக்கவேண்டும். ஏனெனில் பால் கொடுத்தவுடன் குழந்தையை அங்குமிங்கும் அசைத்தால் சில வேளை குடித்த பாலை வாந்தி பண்ணிவிடும்.

சிலர் பசுவின் பாலுக்குப் பதிலாக, ஷாப்புகளில் தகரடப்பிகளில் அடைத்து விறகப்படும் கட்டிப் பாலை உபயோகப்படுத்துவதுண்டு. இதில் அதிகம் சர்க்கரை சேர்ந்திருக்கின்றது. இதினால் குழந்தைகள் கொழுத்து புஷ்டியாகிறதேயன்றி, தேகத்துக்கு அத்தனை பலம் உண்டாவதில்லை. அநேக குழந்தைகளுக்கு இந்தப் பால் வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாமல் வயிறேட்டங்கண்டு கொடிய ஆபத்துக்கிடமாகிறது. ஆகையால். சுயமான பசும்பால் கிடைக்கக்கூடிய ஸமயத்தில அதையும் உபயோகிக்க வேண்டுமேயன்றி இந்தக் கட்டிப் பாலை உபயோகிக்கிறது நல்ல தல்ல.—இரஞ்சித போதினி

தொட்டதெல்லாம் பொன்.

முன்னொரு காலத்தில் கிருபண சிரோமணியாகிய மகிபாலன் என்று பெயருடைய ஒரு அரசன் ஒரு தேசத்தை ஆண்டு வந்தான். அவன் மிக்க செட்டாக விருந்து பணத்தைச் சேர்த்து வைத்திருந்தான். அவனுக்கு மிக்க அழகுள்ள சிறிய பெண்குழந்தை ஒன்று இருந்தது. அக்குழந்தையினிடத்தில் அவன் மிகவும் அன்பாயிருந்தான். அவள் பெயர் இராஜசேகரி. மகிபாலன் என்பவன், இவ்வுலகத்திலுள்ள எலலா விலையுயர்ந்த சாமான்களையும் விட தங்கத்தின்மேல் மிகப் பேராசை பிடித்தவனாயிருந்தான். அவன் தன் கிரீடம் தங்கத்தினால் செயபப்பட்டமையால் அதை மிகவும் மதித்தான். இல்லாவிடில அதை கண் திறந்து கூடப் பார்க்கமாட்டான். தங்கத்தைவிட விலையுயர்ந்ததென்று அவன் எதை யாவது மதித்திருந்தால் அது தன்னுடைய அழகுவாய்ந்த பெண்செல்வமேயன்றி வேறிராது. அவன் எவ்வளவுக்கு எவ்வளவு தன் குழந்தையினிடத்தில் அன்பாயிருந்தானோ அவ்வளவுக்கு அவ்வளவு தங்கத்தைச் சேகரிப்பதிலும் ஆசையாயிருந்தான். அவன் தன் குழந்தைக்குத்தான் பிறந்தது முதல் சேகரித்த தங்கத்தைக் கொடுப்பதுதான் பெரிய காரியமென்று நினைத்தான். அவன் வாழ்நாளெல்லாம் தங்கம் தேடுவதிலேயே செலவழித்துக் கொண்டிருந்தான். அவன் எப்பொழுதாவது மாலைப்பொழுதில் தங்கம்போல் பளபளவென்று இருக்கும் மேகங்களைப் பார்த்தால் அந்தோ! இது தங்கமாயிருக்கக் கூடாதா? இதை என் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக் கொள்வேனே யென்றும் எண்ணிக்கொள்வான், ராஜசேகரி தன்தகப்பனிடம் புஷ்பக்கொத்தோடும் தோட்டத்திலிருக்கும் அற்புதமான இலைகளோடும் ஓடிவந்தால் அவன் அவளைப்பார்த்து "இந்த புஷ்பங்கள் தங்கமாயிருந்தாலும் பறிப்பதிலுண்டாம் சிரமத்தையாகிலும் பெறலாம் என்று சொல்வான்,

அவனுடைய வாலிபத்தில் தங்கத்தின்மேல் பேராசை கொள்ளுமுன் மகிபாலன் புஷ்பங்கள் கொய்வதில் மிக்க ஆவலுடையவனாக விருப்பான். அவன் ஒருதோட்டம் உண்டுபண்ணி நாலாபக்கத்திலும் வேலிகளடைக்க அங்கே, அநந்தகோடி ஜீவராசிகளுள் எதுவும் முகர்ந்திராததும் பார்த்திராததுமான ஜாதிச் செடிகளைப் பயிராக்கிவந்தான். அவை இன்னும் அத்தோட்டத்திலேயே வளர்ந்துகொண்டிருந்தன. அவன் அத்தோட்டத்திலே அதைப்பார்த்து ஆனந்தித்துக்கொண்டும் அவைகளின் வாசனையை முகர்ந்துகொண்டும் தன்காலத்தை யின்பமாகப் போக்கிவந்தான். ஆனால் இப்பொழுதோ அவையெல்லாம் தங்கமாயிருந்தால் அவையெவ்வளவு விலை பெறுமென்று கணக்குப் பண்ணிக்கொண்டேயிருக்கிறான். அவன் சிறுவனாயிருக்கும்போது பாட்டில் மிகவும் ஆவலுள்ளவனாயிருந்தான் இப்பொழுது தங்கநாணயங்கள் ஒன்றோடொன்று பட்டு உண்டாகும் சப்தந்தான் அவனுக்குப் பாட்டாகக் காண்கின்றது. கடைசியாக மனிதர்கள் புத்திசாலியாகப்போகிறதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்யாவிடில் முட்டாளாகப்போவது சகஜமாகையால் மகிபாலன் தங்கமல்லாத வேறு வஸ்துவைப் பார்க்கவாவது அல்லது தொடவாவது பிரியமில்லாதவனாய்ப் பைத்தியம் பிடித்தவன் போலாகிவிட்டான். ஆகையால் அவன் தன்னுடைய அரசன் மனையின் கீழ்ச் சுரங்கத்தில் ஒரு இருட்டான அறையில் தன் வாழ்நாளைக்கழிப்பது வழக்கமாகக்கொண்டான். அந்த அறையில் அவன் தன்னுடைய திரவியத்தையெல்லாம் வைத்திருந்தான். அந்த இருள் நிறைந்த பயங்கரமான அறையில்தான் அவன் எப்பொழுதாவது சந்தோஷமாயிருக்க விரும்பினால போய் உட்கார்ந்து திரவியங்களைப் பார்த்துக் களிப்பான். அவன் உள்ளே போய்க் கதவை ஜாக்கிரதையாகத் தாளிட்டுக்கொள்வான். பிறகுஒருபை நிறையத் தங்க நாணயங்களை எடுத்து ஒருதங்கக் கிண்ணத்தில் சப்தப்படாமல் வைத்து அங்கு பிரகாசிக்கிற ஒரு சூரியக்கிரணத்தின் முன்கொணர்ந்துவைப்பான். அவன் ஒருகிரணத்திற்கு

வேண்டிய துவாரந்தான் கூரையில் வைத்திருக்கிறன். அந்தத் துவாரம் கூட வைத்திருக்கமாட்டான். ஏனெனில் அதில்லாமல் தன் தங்கம் ஜ்வொலிக்காது. பிறகு அவன் அத்தங்க நாணயங்களை எண்ணிவைப்பான். பிறகு தங்கக்கம்பியைத் தூக்கி விட்டெறிவான். அது கீழேவந்ததும் அதைக்கெட்டியாகப் பிடித்துக் கொள்வான். பிறகு நாணயங்களை எண்ணுவான். பிறகுகொஞ்சம் தங்கத்தூளை எடுத்துக்கையிலிருந்து நழுவவிடுவான். கிண்ணத்தில் தன்னுடைய உருவத்தைப்பார்ப்பான். தனக்குள் "ஏமகிபாலா ஏ பணக்காரா மகிபாலா நீ எவ்வளவு சந்தோஷமான மனிதனடா' என்று சொல்லிச்சிரிப்பான். ஆனல் அவன் அந்தமுகம் பல்லைக் காட்டிக்கொண்டு இருப்பதைப்பார்த்தால் யாவரும் நகைக்காமலிருக்கமாட்டார்கள். அது அவனுடைய முட்டாள்தனத்தைப் பார்த்துப் பரிகசிப்பது போலிருக்கும்.

மகிபாலன் தன்னைச் சந்தோஷகரமான மனிதனென்று சொல்லிக் கொள்வானயினும் அவன் சந்தோஷமாயுள்ளவனென்று எண்ணிக்கொள்ள இவ்வைந்து கண்டங்களும் அவனுடைய கஜானவாகி அவைமுழுவதும் தங்கத்தால் நிறைந்தால் தான் சந்தோஷகரமாயிருப்பவனென்று நினைத்துக்கொள்வான்.

இப்பொழுது நீங்களெல்லாரும் புத்திசாலியாக இருக்கிறீர்களே. ஆதலால் முன் காலங்களில் மகிபாலன் வசித்தபோது மிகஆச்சரியகரமான செயல்கள் நடந்தன வென்பதை நான் சொல்லவேண்டியது அனுவசியமே. அச்செயல்கள் நம் வாழ்நாட்களில் நம்தேசத்தில் நடக்குமானல், நாம் ஆச்சரியப் படுவோம் என்பது உண்மையே. ஆனல் அப்படிப்பட்ட செயல்களும் இப்பொழுது நடக்கிறது. நம் வாழநாட்களே, முன் காலங்களைவிட விநோதமானது என்று நினைக்கிறேன். அது எப்படியாகவிருப்பினும்நாம்நம்முடைய கதையைச்சொல்லுவோம்.

ஒருநாள் மகிபாலன் வழக்கம்போல், தன் கஜானவில உட்கார்ந்து களித்துக் கொண்டிருக்கும்பொழுது அவன் ஒரு

நிழல் தன் தங்கநாணயங்களில் விழுவதைக்கண்டு திரும்பிப்பார்க்கையில், யாரோ ஒருவன் சூரியகிரணத்தின் பக்கத்தில் நிற்கக் கண்டான். அதை யுற்றுப்பார்க்கையில் அவன் ஒரு சிரித்த முக முடையவனுகவும் அழகு வாய்ந்தவனுயு முள்ள ஒரு வாலிபனு யிருந்தான். அவன் சூரியகிரணத்தை மறைத்துக் கொண்டிருந்தாலும் முன் இருந்ததைவிட இப்பொழுது அத்தங்கத்தின் ஜ்வலிப்பு அதிகமாயிருந்தது. அவன் சிரிக்கும்பொழுது தங்க மெல்லாம் பிரகாசித்தது.

மகிபாலன் நான் கதவைநன்றுகப் பூட்டிவிட்டேன். ஒருவரும் உள்ளே வரமுடியாதே. ஆகையால் இப்பொழுது வந்திருக்கிற வன் சாதாரணமான மனிதனல்ல வென்று நினைக்கலாயினன் அந்த மனிதன் நல்லவனும் அன்புள்ளவனுயுமிருந்தான். அவன் மகிபாலனின் பணத்தை அதிகரிக்கவே வந்தான். அவன் அறையைச் சுற்றிப்பார்த்துவிட்டுமகிபாலனிடத்தில்திரும்பிப்பார்த்து, "ஏமகிபாலா, நீ அதிகச்செல்வம் படைத்தவன். இந்த அறையில் தவிர இவ்வுலகத்தில் வேறு அறையில் இவ்வளவு பொன்இருக்கு மென்று நான் நினைக்கவில்லை" என்று சொன்னுன்.

"நான் கொஞ்சந்தான் சேகரித்திருக்கிறேன்" என்று மகிபாலன் இன்னும் பணஆசை அதிகமாகக்கொண்டவனுப் பதில் சொன்னுன்.

"இதைச்சேகரிக்க என்னுடைய வாழ்நாளெல்லாம் செலவழித்திருப்பதால் இதைச்சொற்பமென்றே நினைக்கக்கூடும். ஒருவன் ஆயிரம் வருடகாலஞ் ஜீவித்திருப்பானேயாகில் அவன் ஒருவேளை பணக்காரனுகலாம்" என்றுன்.

"என்ன சொன்னுய்? அப்படியானுல் உனக்கு இன்னும் திருப்தியாகவில்லையா" என்றுன்.

மகிபாலன் தனக்கு திருப்தியாகவில்லை யென்று தன் தலையை யசைத்தான். "அப்படியானுல் உனக்கு எப்பொழுது

திருப்தியாகும் சொல் கேட்டுவைப்போம்" என்றுனம்மனிதன்.

மகிபாலன் சற்றுப்பேசாமலிருந்து மறுபடியும் யோசிக்கலாயினுன். தன்னுடையஎண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு இம் மனிதன் இங்கு வந்திருக்கிறனென்று எண்ணிக் கொண்டான். ஆகையால் நமக்குவேண்டியதை இப்பொழுதே கேட்டுக்கொள் வதற்குத் தக்கசமய மென்றெண்ணி மறுபடியும் மறுபடியும் யோசிக்கலாயினுன். யோசித்து யோசித்து ஒருமலைமேல் மலை யாகத் தங்கத்தை கேட்பதாக எண்ணிக்கொண்டான். அவனுல் அது சாத்தியப்படவில்லை. கடைசியாக ஒரு எண்ணம் மகிபால னுக்குத் தோன்றிற்று. அது எல்லாவற்றையும் விட மேலான தாகவே அவனுக்குத் தோன்றிற்று.

மகிபாலன் தலையை உயரே தூக்கிக்கொண்டு அவனைப் பார்த்தான். மகிபாலா! நல்லது! உன்னைத் திருப்திப்படுத்தும் படியான எண்ணம் என்மனதில் வந்திருப்பதாகத் தெரிகிறது. அதைத்தெரியமாகச் சொல் என்றுன் "வேறென்று மில்லை இது தான்; எனக்குப்பொன் சேர்க்கிறதென்றுல் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் நான் தொட்டதெல்லாம் தங்கமாகி விடவேண்டு" மென்றுன்.

இந்த மனிதன் கொலலெனச் சிரித்து அவனைப் பார்த்து தொட்டதெல்லாம் தங்கமாகவேண்டுமா? நல்லது, என்னயோசனை என்ன யுக்தி, நல்லவரந்தான் நீ கேட்டது. அப்படியாளுல் இது உனக்கு திருப்திப்படுமா" என்று வினவினுன்.

"அதற்கும் சந்தேகமுண்டோ வென்றுன் மகிபாலன். "அப்படியாளுல் பிறகு இந்த வரனைப்பற்றி வருத்தப்படமாட் டாயே" என்று அம்மனிதன் கேட்டான். "வருத்தப்படும்படி என்னை என்ன செய்யும்? நான் சந்தோஷமுடையவனுயிருக் கத்தான் கேட்டுக்கொண்டேன்" என்றுன்.

"அப்படியாளுல் உன்னிஷ்டப்படியே ஆகட்டும்" நாளைக் காலையில் அந்தவரன் உனக்கு கிடைக்கும் "என்று சொல் லிப் போய்விட்டான்.

குடும்பப் பெண்கள் அனுசரிக்க வேண்டிய முறைகள்.

தற்காலத்தில் அநேக குலஸ்திரீகள் தாங்கள் இன்னவிதங் குடும்பத்தில் நடக்க வேண்டுமென்பதை அறியாமலும், சிலர் அறிந்தும் அவைகளைக்கவனியாமலும் தாறுமாருய் நடப்பதின் பயனுக அக்குடும்ப ஆடவர்கள் படுந்துன்பங்களை உத்தேசித்து இவ்வியாசத்தை இங்கு இன்று எழுதப் புகுந்தனம்.

1. இப்பூவுலகின்கண் ஒருவன் பெறுதற்கரிய அரியபெரிய பொருள்களின் மனையாளினும்பெரியது ஒன்றுளதோ? இல்லை! என்றாலும் எல்லாமனையாளையுமே இவ்விதம் சொல்லிவிடலாமா? முடியாது; யாரிடத்தில், ஸ்திரீரத்னங்களுக்குரிய முக்கிய குணங்களாகிய நாணம் (வெட்கம்) மடம் (எல்லாமறிந்தும் அறியாததுபோலிருத்தல்) அச்சம் (என்றும் காணுத ஒரு பொருளைக் கண்டவிடத்து அச்சமுறுதல்) பயிர்ப்பு (கணவதல்லாதவதுகை தன்மேல்பட்டால் அருவறுத்தல்) இவைகள் மட்டுமல்லாமல் நற்குணம் நற்செய்கைகளும் வாய்க்கப் பெற்றறுளதோ அவர்களையே மனையாளென்று சொல்லத்தகும்.

2. தன்புருஷன் அழகில்லாமல்குரூபியாயிருந்தபோதிலும், சர்வரோகியாயிருந்தபோதிலும் நிரக்ஷரகுக்ஷியாய் நிர்முடனு யிருந்தபோதிலும், அஷ்டதரித்திரனு யிருந்தபோதிலும், வயதில் மூப்படைந்து கிழவனுயிருந்தபோதிலும் அவனை அவமதியாமல் எல்லாபாக்கியங்களும் பெற்றவனுகக்கருதி மேன்மைப்படுத்தி அவன் சொல்லும் வார்த்தைகளுக்கு யாதொருதடையும் சொல்லாமல் மனமகிழ்ச்சியுடனும் பக்திவினயத்துடனும் அவனுக்கு வேண்டிய உபசரணைகளைச்செய்து அவனிடத்தில் எக்

காரணத்தை முன்னிட்டாலும் சரி; யாதொரு பொய்யும் சொல்லாமல் உள்ளது உள்ளபடியே உண்மை உரைத்து நகமும் விரலும் போல ஒற்றுமையுடன் எல்லாவிஷயங்களிலும் ஒன்றுபட்டு நடத்தல்வேண்டும்.

3. மனைவியானவள் கணவனுக்குப்பணிவிடைசெய்வதில் தாதிபோலவும், "தாயிக்குப் பிறகு தாரம்" என்பதற்கேற்ப அன்னமிட்டு ஆதரிப்பதில் தாயைப்போலவும், யுக்தியோசனை சொல்வதில் மந்திரியைப்போலவும், விசனமுற்றவிடத்துஆறுதல் சொல்லி தேற்றுவதில் சிநேகிதனைப் போலவும், சுகமளிப்பதில் தாசியைப் போலவுமிருக்கவேண்டும்.

4. கணவன் சிலசமயங்களில் எக்காரணத்தாலாவது கோபித்துக்கொண்டாலும் அல்லது அடித்தாலும் தானும்திரும்பிப் பிடாரிமாதிரி பெருத்ததொண்டையுடன் எதிர்த்துக் கோபிக்கவாவது அல்லது திருப்பி அடிக்கவாவது அல்லது மனதிற்குள்ளேயே முணு முணுத்து முகத்தைக் கடுகடுக்கவாவது கூடாது. யாதுகாரணங்கொண்டு கோபிக்கிறானென்பதை யோசிக்குமுன் சிரித்தமுகத்துடன் அவன் கோபத்தைத் தணிக்கவேண்டுமே யல்லாது முரண்படின் அவனுக்குக் கோபம் அதிகரித்துச் சண்டைமுற்றி அயல் அண்டை வீட்டுக்காரர்கள் நகைத்துப் பரிகசிக்க ஹேதுவாகுமே அல்லாது வேறு யாதொரு பயனையும் விளையாது.

4. (a) கணவன் துன்மார்க்கர்களுடன் விலைமகள் தாசி வீட்டிலேயும், மறுமனையாள் வாழ்க்கையிலேயும் காலம்கழிப்பவனானால் தானும் பரபுருஷனை நாடிச்செல்லாமல் ஜகதீசனிடம் விளையுந்தீங்குகளைத் தெரிவித்து அவனை நல்வழியில் திருப்புதல் வேண்டும்.

5. வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்வது எப்பொழுதும் பிசகு, கடையில் இது துன்பத்தை விளைவிக்கும். இதைக் குறித்து

எழுதப்புகின்விரியும். ஆதலால் மனைவிமார்கள் தங்கள் புருஷன் வரவுக்குத் தக்கபடி செலவுசெய்து அதிலேயே பிற்காலத்திற்கு வேண்டுமென்று கொஞ்சம் மிகுதிவைத்தும் வருவதுடன் வீட்டுப் பண்டங்களைக் கண்டபடி கண்ட இடங்களில் போடாமல் வைக்கவேண்டிய இடங்களில் வைத்துச் சீராய்ப்பாதுகாத்து வருதல் அவசியம்.

6. வீட்டில் யாதாமொரு பண்டமில்லாவிடில் கணவன் அலைந்து திரிந்து பசியுடன் வரும்போது அவனிடம் உப்பு இல்லை புளியில்லை என்று சொல்லாமல் அவன் உண்டு பசியாறிச் சந்தோஷமாயிருக்குக் காலங்களில் சமயம்பார்த்துச் சொல்ல வேண்டும். ஏதோ இருக்கும் பண்டங்களைக் கொண்டு எல்லாவற்றையும் தன்னால் கூடியவரையில் நன்ருய்ச் செய்து வர வேண்டும்.

7. வீட்டில், புருஷனுக்குப் பெற்றோராகிய மாமனார், மாமியாரைத்தன் பெற்றோரெனக்கருதி "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்றதற்கேற்ப அவர்கள் சொல்லை அசட்டை செய்யாமலும், தட்டாமலும் கேட்டு அதன்படி நடந்து அவர்களுக்குக் காலாகாலங்களில் செய்யவேண்டியவற்றைச் செய்து அவர்களுடைய மனதுக்கு வருத்தமுண்டாகும்படி செய்தால் அது தன் குடும்ப க்ஷேமத்திற்கு ஹானியை விளைவிக்குமென்பதை நினைத்து அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லாமல் நடந்துவர வேண்டும். தவிர புருஷனுடைய சகோதரர்களுக்கும் உறவினர்களுக்கும் யாதொரு மனஸ்தாபமுமில்லாமல் நடத்தல் வேண்டும்.

8. வீட்டில் ஓரகத்திமார்களிருந்தால் அவர்களைத் தன் சகோதரிகளென்று எண்ணி வெகு ஒற்றுமையுடன் நடக்கவேண்டும். சிலர் அஃதல்லாது புருஷன் வீட்டிற்கு வந்ததும் நாம் வேறையாய்ப் போய் விடலாம் என்று புருஷனுக்குத் தலையணை மந்திரம் உபதேசித்து வேற்றுமைப்படுத்திவது வழக்கம். இது

மிகவும் மூடத்தனம். இதன் பயன் பின்னால் வருத்தம் வந்துற்ற காலத்துத் தெரியும். ஒற்றுமையினால் நாம் அநேக காரியங்களை வெல்லலாம். ஆகையால் சண்டை சச்சரவு இல்லாமலிருத்தல் வேண்டும். ஓரகத்திமார்களில் ஒருத்தி பணக்காரர் வீட்டுப் பெண்ணாயிருந்து நகைகள் ஜாஸ்தியாயணிந்திருந்தால் அவை களைக்கண்டு நமக்கில்லையே என்று துராங்காரம் கொண்டு விசனப்படாமலும் புருஷனைச் செல்லரிக்கிற மாதிரியாக சதா நகைகளுக்காக அரிக்காமலும் நமக்கு ஈசன் கொடுத்தது இவ் வளவுதான் என்று திருப்தியுடன் இருப்பதும் தவிர,

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என்ற பாவிற்கிணங்க நற்குணங்களே நாம் அணியத்தகுந்த பெருத்த ஆபரணமென்பதை மனதிற் சதா இருத்தி வெகு சந்தோஷமாகக் காலங்கழிக்க வேண்டும்; பணக்காரர் வீட்டுப் பெண்ணே தனக்குத் தன் பணமிருக்கிறதென்று கர்வங்கொண்டு எல்லாரையும் அதிகாரம்செய்யாமல், செல்வம் நிலையற்றதென் பதை மேற்கொண்டு தன் சகோதரிமார்களுடனும் மற்றுமுள்ள வர்களுடனும் குலமக்களின் குணங்களை அனுசரித்து நடத்தல் வேண்டும்.

9. குடும்ப வேலைகளை அவள் தான் செய்யட்டுமே இவள் தான் செய்யட்டுமே என்ற போட்டியுடனிராமல், நம் குடும்பம், நம் வீடு, நம் சுற்றத்தார் என்று எல்லாவற்றையும் மிகப் பொறுப்புடன் மேல் போட்டுக்கொண்டு செய்யவேண்டும்.

10. புருஷனுக்கு சகோதரர்களிருக்கும் வீட்டில் அவர் களுக்குத் தெரியாமல் தன் புருஷனிடமிருந்தோ அல்லது வீட்டிலிருக்கும் பண்டங்களை விற்றோ பணம் சேர்த்துத் தன்

தாய் வீட்டிற்கு அனுப்பித் தான் அங்கு போய் வரும்போது "இது என் தாய் போட்டாள் இது என் தகப்பன் போட்டான்" என்று ஒவ்வொரு நகையாகச்செய்து போட்டுக்கொண்டு வருவது மிகக்கொடிய வழக்கம். இவ்விதம் போட்டுவரும் நகைகளானது அச்சமயம் நகைகளாகக் கண்டாலும் எவ்விதமாக மோசவழியில் சகோதரதுரோகம் செய்து சம்பாதிக்கப்பட்டதோ அவ்விதமாகவே "புதிய வெள்ளம வந்து பழைய வெள்ளத்தையுமடித்துச் சென்றது" என்ற பழமொழிப்படி முந்தி இருந்த நகைகளையும் சேர்த்து யாதொரு தெண்டச்செலவில் கொண்டுபோய் விடுமாகையால் ஈஸ்வரனுக்குப் பொதுவாக நடக்க வேண்டும்.

11. சாப்பிடும்போது புருஷன் கூட வேறுயாருவது உட்கார்ந்திருந்தால் புருஷனுக்கு ஒரு விதமாயும் கூட இருக்கிறவர்களுக்கு ஒரு விதமாயும் பந்தி வஞ்சனைசெய்து பரிமாறக்கூடாது. பந்தி வஞ்சனை மகா கொடியது. இதைக் குறித்து சமயம் வாய்த்த விடத்து எழுதுவாம். புருஷன் தேகத்தைப் போலத்தானே மற்றவர்கள் தேகத்தையும் சிருஷ்டித்திருக்கிறுர் கடவுள் என்பதை உத்தேசித்து ஒரே சீராகப் பரிமாறவேண்டும்.

12. பெண்கள் நடக்கும்போது பூமி அதிரும்படி திடீர்திடீரென்று நடக்காமல் அன்னத்தைப்போல் மெதுவாய்த் தன் கால் கட்டை விரலை நோக்கிய வண்ணமாகத் தலை குனிந்து நடத்தல் வேண்டும்.

13. ஆடவர்கள் யாராயிருந்தபோதிலும் பத்து வயதுப் பையனுக இருந்தாலும் சரி அவன் ஆடவன், தான் ஸ்திரீ ஜாதியைச் சேர்ந்தவள் என்பதைக் கருதி அவர்களுடன் சிரித்து இறைந்து பேசிப் பரிகசிப்பது கூடாது. யாருடன் பேசியபோதிலும், யாவரும் ஒருத்தி பேசுகிருளாவென்று ஆச்சரியப்படும்படியாக குயிலனுமினிய குரலுடன் மிக்க மெதுவாகப் பேச வேண்டும்.

14. அயல்வீடு அண்டை வீடுபோய் சச்சரவு வம்பு வார்த்தையாடிச் சண்டை இழுத்துக்கொண்டு வீட்டு விஷயங்களைக் கவனியாது சாமான்கள் எல்லாம் இறைந்து கிடக்கப் புருஷனுக்குக் கூட வேளா வேளையில் வேண்டியவற்றைக் கொடாமல் திரிவது கெட்டவழக்கம். இவர்களைக் குலமகளெனக் கூறலாமா?

15. வீட்டு வேலைகளெல்லாம் செய்தான பிறகு நேரமிருந்தால் நம் புராணங்களாகிய இராமாயண மகாபாரதங்களைப் படித்துத் தெரியாதவர்களுக்குப் புத்தி போதித்தும் வீட்டிலிருக்கும் மாமனார் மாமியார் முதலாகிய பெரியோர்களுக்கு ஆனந்த முண்டாகும்படி படித்து மகிழவேண்டும்.

16. யாராவது விருந்தினர் தன் வீட்டுக்கு வந்தால்,

"காணக்கண் கூசுதே கைபெடுக்க நாணுதே
மாணிக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என் பெல்லாம் பற்றி யெரிகின்ற தையயோ
அன்பில்லா ளிட்ட வமுது"—என்ற பாவின்படி

"இந்தப் பாழாப்போவானுக்கு எப்பொழுது மிதுதான் வேலை" என்று புருஷனை வைது கடுகடுத்த முகத்துடன் வயிறெரிந்து கொண்டு ஐயோ இவர்கள் சோற்றுக்கு வந்து விட்டார்களே என்று பேசாமல் "ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்துண்மை பேசி, உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே அமிர்தமாகும்" என்றதைபோர்ந்து நமக்கு அதிதிகள் கிடைக்கப் போகின்றார்களா என்று நினைத்து மனமகிழ்ந்து அவர்களுக்குத் திருப்திகரமாகப் போட்டுப் பிறகு மீதி இருந்தால் தாங்கள் புசிக்கவேண்டும்.

17. கோவில், குளம், நதி முதலியவைகளுக்குக் கணவனை விட்டு, புண்ணியம்பெறலா மென்று, தாங்களே செல்வதும், விருந்தாதி முதலானவைகளைக்கணவன் அனுஷ்டிக்கா திருக்கும்போது அனுஷ்டித்தலும், தானதருமம் முதலியவற்றைக் கணவனை அசட்டை செய்து தாங்களே செய்வதும் ஆகிய இவைகள் கிஞ்சித் தேனும் பயன்தரமாட்டா. ஸ்திரீகள் ஒருக்காலும் சுயேச்சையாய் ஒருகாரியமும் செய்யக்கூடாது. கன்னிப்பரு

வம் கழியுமட்டும் பெற்ரோருடையஆதீனத்திலும், பிறகு புருஷனுடைய ஆதீனத்திலும், அவனுக்குப் பிறகு புத்திரனுடைய ஆதீனத்திலு மிருத்தல்வேண்டும். முக்கியமாகக் கணவனுக்குமின்றிப தெய்வம் கிடையாது; கோவில் குளம், நதி, தானம் தருமம் தவம் விருதம் யாவும் கணவனே. அவனுக்குச் சரியான பணிவிடை செய்து, மாதற்குரிய குணங்களைக் கடைப்பிடித்து நடந்து கற்பை நிலைநிறுத்துவதே எல்லாமாகும்.

18. கடைசியாக

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலும் கூடி வாழலாம்—சற்றேனும்
ஏறுமாருக விருப்பாளே யாமாகில்
கூருமல் சன்னியாசங் கொள்."

என்றதைஎப்பொழுதும்மனதில்குடிகொண்டிருக்கச்செய்து புருஷனுக்கு எவ்விதமான குறைவும் நேராவண்ணம் நடந்து எல்லாத்தருமத்திலும் மகாசிரேஷ்டமான ஆன்ரோரால்கூறப்படும் இல்லறதர்மத்தை நடத்தி இகபரசாதகங்களை அடையவேண்டும்.

இவ்விதமாக யாவருமிருந்து வருப்படி ஈசுவரன் திருவுளமகிழ்ந்து அனுக்கிரகிப்பாராக.

சீதாபதி.

சீதாபதிக்கு வயது இருபத்திரண்டிருக்கும். ஐந்தடி உயரமும் அதற்குத் தகுந்த பருமனும் வெகு அழகான தோற்றமுமுடையவன். இவன் கண்கள் வெகு விசாலமாய் தாமரை யிதழ் போலிருக்கும். முகம் இந்துவென விளங்கும். நலல செவப்பு. இவனைப் பார்க்கும் ஆடவரே இவனைக்கண்டு நல்ல அழகு என்று வியந்து பேசுவார்கள். இவன் தான் கொண்ட கருத்திற்கேறப நடையுடை பாவனைகளிலுமிருந்து வருகிருன். தலையை கிராப் செய்து கொண்டு சுதேசக் கிறீஸ்தவர்போலிருப்பான். இவன் தந்தை ஸ்ரீகண்டய்யர் இவனுக்குப் பதினைந்தாவது வயதிலேயே

ஓர் சிறு பெண்ணைத் தேடி விவாகம் செய்வித்திருக்கிறார். ஆயினும் இவன் இவனுடைய குலாசாரத்திற்கேற்ப வேஷ்டியைக் கச்சம் வைத்துடுத்தாது தட்டாடை கட்டிக்கொள்வதே வழக்கமாகவைத்துக்கொண்டான். மூன்று நாட்களுக்கு ஒரு முறை முகக்ஷவரம் தானே செய்துகொண்டு முகத்தைக் கண்ணுடிக் கணக்காய் வைத்திருப்பான். இவன் இப்பொழுது பி. எல். படிக்க வந்திருக்கிறான். திருவல்லிக்கேணியிலுள்ள சேஷப்பர் ஓட்டலில் சாப்பிட்டு பைக்ராப்ட் ரோட்டில் ஓர் மெத்தையில் ரூம் வைத்துக்கொண்டிருக்கிறான். கோபாலன் நரசிம்மன் இருவரும் பி எல், படிக்கத்தான் வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிருவரும் பட்டணத்தில் ஜாகையோடு இருந்து வருகிறார்கள். இன்று அவர்களிருவரும் உலாவும் பொருட்டு கடற்கரை வந்தார்கள். இவனும் அப்படியே இங்கிருந்து புறப்பட்டுப் போனான். ஆகவே ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்து ஓரிடம் உட்கார்ந்து பேசத் தொடங்கினார்கள்.

கோபாலன், சீதாபதியின் குடுமியையும் அவனிருக்கும் மாதிரியையும் பார்த்து, "என்னப்பா! நீ பிராமணன்தானா? பட்டணத்திற்கு வந்தபிறகு அதுவும் இப்போது வெகு மாதிரியாயிருக்கினாயே. உம்பாடு ஜில்! லென்று இருக்கிறாப்போலிருக்கிறது. அங்கே திண்டாடுகிறார் பிராமணன் பாவம் எங்கே கல்லியாணம்! எங்கேதெவசம் என்று. நீகொம்மாளம்போடு இங்கே என்று சீதாபதியைக் கேட்டான்.

சீதா.—சிரித்துக்கொண்டு என்னம்மா! பேசரே. நாம் எப்போதும் அப்படித்தான்.

கோ:—நான் பெண்பிள்ளையலல அம்மாவென்றழைக்க!

நர.—தலையை மோந்து பார்த்து அடே என்னடா மணக்குது கோபாலா! ஆள் இப்போ ஜில் என்று தானிருக்கிறான்.

சீதா.—என்னடா! அடே. குடுமியை யிப்படி வைத்திருந்தால் இதிலொரு ஏச்சா! தலையை எண்ணெய்தடவி வாரக்கூடாதா! இதுக்கொருபேச்சா! என்னடா சிறிதும் நாகரிகம் தெரியாத

காட்டுமிராண்டிபோல் பேசுகிறீர்களே! உங்களைப்பார்த்தால் இங்கிலீஷ் படித்த தற்கால மனிதர்களாகவே தெரியவில்லையே. என்ன வேடிக்கையடா இது.

கோ.—நரசிம்மா! மீசைவேறு வாயில்.—

நர.—நல்லாயிருக்கு.

சீதா.—நீங்கமட்டும் வைத்துக்கொள்ளலாமா?

நர.—எங்கஜாதி வழக்கம். நீ!

சீதா.—போடா! ஜாதியையாரோ கண்டான். இந்த ஜாதி வித்தியாசம் பாராட்டுகிறவரையில் நம்மதேசம் உருப்பிடப்போவதில்லை. மூடஜனங்களைப் போகச்சொல்லு. எங்க தாத்தா வீட்டில் விளக்கெண்ணெய் விளக்கிருந்து அழுது வழியும். வெளிச்சமேதராது. அதையே நானும் என் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும் போலிருக்கிறது. அவர்கள் தொடைக்குமேல் வேஷ்டி கட்டிக்கொண்டிருந்தார்கள்? நானும் கட்டிக்கொள்ளவேண்டுமோ? அவர்கள் ஆறுமாதத்திற்கொருமுறை க்ஷவரம் செய்துகொண்டார்கள். நானும் அப்படியே செய்யவேண்டுமோ. நீங்கள் என்னடாப்பா சொல்வது வேடிக்கையாயிருக்கிறது.

கோ.—சரி நான் பேசவில்லை. ஜமாய் எப்படியானாலும். உனக்கென்ன வேதனையா விசாரமா; மாதம் பிறந்து ஐந்து தேதியாவதற்கு முன் உனக்குப் பணம் அனுப்பிவிடுகிறார். விசாரமற்றுச் சாப்பிட்டுவிட்டுப் பேசுகிறாய்; பேசு.

நர.—இருக்கட்டும். நீ எங்கேசாப்பிடுகிறாய்?

சீதா.—நீயேன் அதைக்கேட்கின்றாய?

கோ.—கேட்டால் என்ன சொல்லேன்.

சீதா.—சேஷையர் ஓட்டலில்.

நர.—எங்காணும் சேஷையருடைய ஓட்டலில். மதராஸ் கிளப்பில் ஏன் கூடாது?,

சீதா.—அவனுக்குப்பிடித்த இடத்தில் தானே சாப்பிடுவான். இதொருகேள்வியா?

நர.—அதற்கல்லவடா நான் கேட்டது? உனக்கு ஜாதிமதபேதந் தான் கிடையாதே. அங்கு போய்ச்சாப்பிடுகிறது தானே?

சீதா.—அதற்கும் ஓர் சமயமுண்டு. அப்பொழுது நடக்கும்.

கோ.—ஓ கோகோ! அங்கும் இவனுக்குப் புசிக்க இஷ்டந்தான் போலிருக்கிறது!

சீதா.—ஆமாம். அதற்குமேல்?

நர.—அதற்குமேல் என்ன? அவரவர்க்கு அவரவா இஷ்டந்தான். பெரிது. ஜாதியாசாரங் கொள்கைகளல்ல!

கோ.—ஆம்? பேஷ்! சீதாபதி! உன்தந்தையின் அபாரயோக்கிய தையைக்கெடுக்க நீ எங்கேவந்து தோன்றினுய். அவருக்கு எப்படி நீ வந்து பிள்ளையாகப் பிறந்தாய்?

சீதா.—நீ உங்கப்பாவுக்கு எப்படிப் பிள்ளையாகப் பிறந்தனேயோ அவ்வாறே நானும்பிறந்தேன்!

நர.—சீதாபதி! பேஷ்! நல்லபதில். கோபாலா! பிறகு உன் பேச்சென்ன?

இங்ஙனம்இவர்கள்பேசிக்கொண்டிருக்கையில்திடீரென்று வானம் இருண்டு மழைதூர ஆரம்பித்தது. ஆரம்பித்ததும் எல்லாரும கடற்கரையை விட்டுப்புறப்பட்டார்கள். சிலர் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு ஓடினுர்கள். சிலர் தங்கள் குடையைப் பிடித்துக் கொண்டு வேகமாக நடந்தார்கள். இவர்கள் மூவருக்கும் கையிற்குடையில்லாததால் தலையில் துணியைப்போட்டுக்கொண்டு ஓடி பிரஸிடென்ஸி காலேஜ் வாசல் முன்னிலையில் ஒதுங்கினுர்கள். இன்னுஞ்சிலர் அங்குவந்து ஒதுங்கினுர். மழையும் பலத்து மின்னலுடன் ஆரம்பித்துவிட்டது. இச்சமயம் மணியும் ஆறடித்துவிட்டது. ஒருவரையொருவர் அறியாவண்ணம் எங்கும் பேரிருள் சூழ்ந்துயாவரும் வீடுபோய்ச்சேர மழை விடுமோ விடாதோ வென்கிற சந்தேகத்துடனிருக்கிறுர்கள். சிலர் இந்தச்சென்னைப்பட்டணத்தில் இப்படித்தான் திடீரென்று மழை பொழியும் என்கிறுர்கள். சிலர் குடையில்லாமல் இந்த ஊரில் வெளிப்படுவது பெரும் பிழை என்கிறுர்கள். சிலர் அடேபாக்கெட் பத்திர மென்கிறுர்கள். கோடைகால மழையானதால், மழை பொழியத்தொடங்கி ஒரு மணி நேரமாயும் விட்டபாடில்லை.

மழையில் நனைந்துகொண்டே வீடு போகத் துணிந்து அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள் சிலர். கோபாலன், நரசிம்மன், சீதாபதி மூவரும் மழைவிட்ட பின்புபோவதென்று தீர்மானித்து அங்கேயேதங்கியிருந்து பலபடியாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். வரும்

A. S. பாரதி.

லண்டன் பட்டணத்துள்ள ஏழைகளின் தொகை:—லண்டன் பட்டணத்தில் 1462-புருஷர்களும் 32-ஸ்திரீகளும், 2-பிள்ளைகளும் பிழைப்பதற்கு வழியும் குடியிருப்பதற்கு வீடு மின்றியிருக்கின்றார்கள்.

கல்வியிற் சிறந்த மாணவர்:—பம்பாய் யூனிவர் ஸிட்டியில் பீ. ஏ பரீட்சையில் முதல் வகுப்பிற் றேறியவர் ஒருவரே. அவர் பெயர் மிஸ்டர் ஹசாரப் பாஹார் மால்ஷிங் தாசனி. இவர் ஒவ்வொரு பரீட்சையிலும் முதல் வகுப்பிலேயே தேறியவர். இவர் கலெக்டர் பரீட்சைக்குப் படிக்குமாறு 10000-ரூபாய் மதிப்புள்ள இந்தியாக் கவர்ன்மெண்டு ஸ்காலர் ஷிப்பு மூன்று வருடத்திற்குப் பெற்றிருக்கின்றனர்.

அச்சியந்திர சாலைகளும் புத்தகங்களும்:—1909-10-வருடத்தில் இந்தியாவில் 2736-அச்சியந்திர சாலைகளிருந்தன; 729-பத்திரிகைகளும் 829-மாகசீன்களும் பிரசுரிக்கப்பட்டன. ஆங்கில பாஷைகளிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் 2112-ஆம். இந்து. தேச பாஷைகளிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் 9934-ஆம்

ஒரு பெட்டைக்கோழியின் மதிப்பு:—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பிலடெல்பியா வென்னு மூரில் நடைபெற்ற கோழிக்காட்சியில் ஒரு பெட்டைக் கோழியை ஒரு கனவான் 2400-பவுண்டு கொடுத்து வாங்கினாராம். அதனது முட்டை யொன்றன் விலை 5-பவுண்டாம். அக்கோழி பஞ்சவர்ணமும், மனோகரமான குரலோசையும், அழகான நடையு முடையதாம்.

பெண் சாதியால் உதடிழந்த புருஷன்:—நெட்டாலில் ஒரு காப்பிரிபோலீஸ் உத்தியோகஸ்தனுக்கு நான்கு மனைவிய ரிருந்தார்கள். அவன் ஒரு மனைவியைப் பார்த்துவிட்டு மற்றொருமனைவியைப்பார்க்கப்போன பொழுது அவள் அன்போடு முத்தங் கொடுப்பதுபோல் பாவித்து முத்தமிட்டு அவனது உதட்டைத் துண்டாய்க்கடித்தகதுக் கீழே துப்பி விட்டாள்.

உற்றுக்கேட்ட குற்றத்திற்காக பத்துப்பவுண்டு அபராதம் கொடுத்தவன்:—ஆப்பிரிக்காவிலுள்ள டர்பனில் ஒரு வெள்ளையன் ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருக்கும்போது மற்றொரு வெள்ளையன் பலகணிவழியாகத் தலையை நீட்டி அவர்கள் பேசுவதை உற்றுக்கேட்ட குற்றத்திற்காக ரூபா பத்து அபராதம் விதிக்கப்பட்டான்.

புத்தகவரவு.

ம-ா-ா-ஸ்ரீ, R. S. நாராயணசாமி அய்யர் அவர்களால் இயற்றப்பட்ட "அஞ்ஞாதவாசம்" அல்லது "மாண்டவன் மீண்டமாயம்" என்னும் பெயர்புனைந்த புத்தகமொன்று வரவேற்று மகிழ்ந்தனம். இது ஓர் துப்பறியும் (Detective) நாவல் 1885-ம் வருடத்தில் நாடெங்கும் பிரபலமாயிருந்த மங்களபுரம் கொலைக்கேசே இக்கிரந்தத்தின் கதாம்சமாக அமைத்துள்ளது. இந்நூலானது நமது நாட்டுச்சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலரும் எளிதில் அறியும்படி இனிமையான நடையில் தெளிவாய் எழுதப்பட்டிருப்பதுடன் படிப்போர்க்கோர்வித ஊக்கத்தை ஊட்டும் தன்மையும் பெற்றுள்ளது. இப்புத்தகம் 165 பக்கங்களுடையது. விலை அணா 8.

பத்திரிகை வரவு.

பூரணசந்திரோதயம்:—இப்பத்திரிகையின் ஆடிமாதத்துச் சஞ்சிகைவரப்பெற்று மகிழ்வுற்றோம். இதிற்காணப்படும் காயத்ரீ, கர்மம், சங்கீதம் முதலிய விஷயங்கள் மிகவும் அருமையாயிருக்கின்றன.

ரஞ்சிதபோதினி—இதன் ஜூலை மாதத்துப்பகுதி கிடைக்கப்பெற்றோம். இதில் கற்பு என்பதைப்பற்றி ஓர் மகமதியரும் தெய்வபக்தி என்பதைப்பற்றிக் கடலூர் மிஸ்டர் ராமசாமி என்பவரும் பாலர்பரிபாலனம் என்பதைப்பற்றி மிஸ்டர் அன்பு சாமுவேல் அவர்களும் எழுதியுள்ளார். விஷயங்கள் வெகு நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பிழைக்கும்வழி:—இதன் ஜூலைமாதப் பகுதி கிடைக்கப்பெற்றோம். இதில் கண்ணாடிச்சாமான்கள், குழந்தை சம்ரக்ஷணை

அசடா, வெண்ணெயும் அதன் பாதுகாப்பும் இவைபோன்ற அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

கிருஷிகன்:—இதன் ஆவணி மாதப்பத்திரிகை கிடைத்திருக்கிறது. இதில் விவசாயிகளுக்குரித்தான சிறந்த விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன.

வர்த்தமானம்.

திருவநந்தபுரம் ஜன கணிதம்:—திருவநந்தபுரத்தில் இவ் வருடமெடுத்த ஜன கணிதத்தின் தொகை 3328975. இது 1901-வது வருடமெடுத்ததிற்கு நூற்றிற்குப் பதினாலு மடங்கு அதிகமாம். கிறிஸ்தவர்கள் 30-வீதமும் மகம்மதியர் 19-வீதமும் இந்துக்கள் 12-வீதமும் அதிகரித்திருக்கின்றனர். ஜனத்தொகையில் நூற்றிற்கு இந்துக்கள் 67-வீதமும் கிறிஸ்தவர்கள் 26-வீதமும் மகம்மதியர் 7-வீதமுமாகவிருக்கின்றனர்.

ஈட்டில்லாக் கலியாணம் மட்டில்லாக் கோடுமை:—பஞ்சாப் மாகாணத்தில் 12, 13-வயதுடைய பெண்களை 50, 60-வயதுடைய வயோதிகருக்குப் பொருளவாவினால் கலியாணஞ்செய்து கொடுக்கின்றனராம். பெற்றோரோ தமது பெண்களுக்கு யமனாக வேற்படுகின்றனர். இவ்விதமான கலியாணங்களே எட்டிலெழுதக்கூடாத பற்பல கேட்டிற் கேதுவாகின்றன.

பிளேக்காலிறந்தவரது தொகை:—இந்தியாவில் பிளேக்காரம்பித்த 1896-ம் வருஷமுதல் 1910-ம் வருஷம் வரையில் இந்தியா முற்றும் பிளேக்காலிறந்தவரது தொகை 68, 60, 211-ஆம்

ஓரற்புத வீடு:—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த நீயூயார்க் பட்டணத்தில் 750-அடி உயரமுள்ள வீடொன்றிருக்கிறது. அதில் 40-அடுக்கு மெத்தைகளிருக்கின்றன. இன்னும் 25-மெத்தைகள் அவ்வீட்டின் மீது கட்ட உத்தேசித்துக் கட்டி வருகின்றார்கள்.